| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **61/2020** |
| **தேதி** | **:** | **20.06.2025** |
| **பெயர்** | **:** | **ரகுராமன் த/பெ. சீனிவாச வரதகுட்டி** |

வா.த.சா.1. /(PW1) திரு.ரகுராமன் த/பெ. சீனிவாச வரதகுட்டி என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

**வா.த.சா.1 (PW1) சாட்சி மீண்டும் அழைத்து 9வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

1) என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தினை சட்டத்திற்கு புறம்மாக செய்யப்பட்ட வில்லங்கத்தினை ரத்துசெய்யக்கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தினை நான் வாங்குவதற்கு முன்னர் சட்ட கருத்துரை பரிசீலனை செய்து வாங்கினேனா என்றால் சட்ட கருத்துரை பரிசீலனை செய்து தான் வாங்கினேன். தாவா சொத்தினை நான் வாங்குவதற்கு முன்னர் அதில் எந்த ஒரு வில்லங்கம் இல்லை என்று உறுதி செய்த பின்னர் தான் வாங்கினேன் என்றால் சரிதான்.

2) வடக்குபட்டு இன்டஸ்டிரியல் பார்க் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் நான் என்ன பொறுப்பில் இருக்கிறேன் என்றால் துணை தலைவராக பொறுப்பு வகித்து வருகிறேன் நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஒரு பொறியாளர் ஆவேன். வழக்கு சொத்து யார் பெயரில் வழங்கப்பட்டது என்றால் வாதி நிறுவனத்தில் பெயரில் வழங்கப்பட்டது. வழக்கு சொத்தினை சொந்த உபயோகத்திற்கு வாங்கினேனா அல்லது ரியல் எஸ்டேட் தொழில் செய்ய வாங்கினேனா என்றால் நிறுவனத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு வாங்கப்பட்டது. ரியல் எஸ்டேட் தொழில் செய்ய வாங்கவில்லை.

3) வழக்கு சொத்தினை யாரிடமிருந்து நான் வாங்கினேன் என்றால் ஒலிம்பியா கன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிமிடேட் என்ற நிறுவனத்திடம் இருந்து நான் வாங்கினேன். நான் வழக்கு சொத்தை வாங்கிய காலத்தில் காலியாக இருந்ததா கட்டிடம் கட்டடப்பட்டிருந்ததா என்றால் காலியாக தான் இருந்தது. தற்போது தாவா சொத்து காலியாக உள்ளதா அல்லது கட்டிடம் கட்டடப்பட்டுள்ளதா என்றால் கட்டிடம் கட்ட அனுமதி வாங்கப்பட்டு கட்டுமானம் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

**(9வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/.M. Kalimuthuvel,
District Munsif,
Sriperumbudur.